www.surabooks.com

சுராவின்

CBSE

# தமிழ் உரைநூல்

வகுப்பு

8

புதிய வினாத்தாள் அடிப்படையில்
தயாரிக்கப்பட்டுள்ளது.

## சிறப்பம்சங்கள்

- செய்யுள், உரைநடை விளக்க மனவரைபடங்கள்
- செய்யுள் வரிவினா விடைகள்
- செய்யுள், உரைநடை எளிமையான வினாக்கள் மற்றும் விடைகள்
- இலக்கண விளக்கம் – அறிந்து கொள்க, நினைவில் கொள்க.
- CBSE வினாத்தாள் அடிப்படையில் சான்று தருக, நிரப்புக, இலக்கணக்குறிப்பு எழுதுக, கூறியவாறு செய்க – பகுதி இலக்கண வினாக்கள் விடைகள்.
- திருக்குறள் சீர்களால் நிரப்புக – வினா விடைகள்
- எளிய நடையில் துணைப்பாட வினாக்கள் விடைகள்
- பொதுப்பத்தி வினாக்கள் – விடைகள் (பலவுள் தெரிக – சுருக்கமான விடையளி மாதிரி)
- காட்சியைக் கண்டு கவினுற எழுதுக – படங்கள் மற்றும் விடைகள்.
- முக்கிய கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள்
- CBSE மாதிரி வினாத்தாள்கள் தரப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027
enquiry@surabooks.com
Ph: 8124201000 / 8124301000
www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : CB8_01

**எழுதி வழங்கியவர்**

**சு. முத்தமிழ்ப்பிரியா,** M.A., M.Ed

**திருத்தியவர்**

**நா.சுந்தர், B.Lit.,**

All rights reserved © SURA Publications. No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 81242 01000 / 81243 01000
வாட்ஸ்அப் : 81242 01000 / 98409 26027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

**Head Office**

**Sura Publications**

1620, 'J' Block, 16th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

18-06-2025

www.surabooks.com

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** – திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் CBSE தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** எட்டாம் வகுப்பிற்கான **CBSE தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

CBSE வினாத்தாள் அடிப்படையில் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாட வினாக்கள் விடைகள், கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**
**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

- ஆர்வமே சிறந்த செயலாக்கத்திற்கான வழி...
- பாடங்களை ஆர்வத்துடன் புரிந்து கொண்டு கதைப் போல் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு செய்யுளையும் அந்நூல், இயற்றியவர் பெயர் அறிந்திருக்க வேண்டும்.
- பாடலின் தொகுப்பு (அல்லது) அதன் தலைப்பு முதலியவற்றை அறிவது அவசியம்.
- பாடலில் இடம் பெற்றுள்ள சொற்களுக்கு பொருள், இலக்கணக் குறிப்பு ஆகியவற்றை அறிதல் அவசியம்.
- இலக்கணப் பகுதியில் 'அறிந்து கொள்க' எனும் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தினை படித்துக் கொள்க.
- கட்டுரை வினாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகளுக்கான தலைப்பை எழுத வேண்டும். குறிப்புகளைக் கொண்டு குறிப்புச்சட்டகம் அமைத்தல் வேண்டும். முன்னுரை மற்றும் முடிவுரையோடு குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு உட்தலைப்புகள் எழுத வேண்டும்.
- பழமொழிகள், திருக்குறள், மேற்கோள்கள், செய்யுள் வரிகள் போன்றவற்றைப் பயன்படுத்தினால் பொதுக்கட்டுரை சிறப்பாக அமையும்.

**ஆழ்ந்து படியுங்கள் வெற்றி உங்களுக்கே!**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# பொருளடக்கம்



| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | **மொழி**<br>தமிழ் இன்பம் | தமிழ்மொழி வாழ்த்து (கவிதைப்பேழை)*<br>ஆழிக்கு இணை (கவிதைப்பேழை)<br>தமிழ் வரிவடிவ வளர்ச்சி (உரைநடை)<br>சொற்பூங்கா (விரிவானம்)<br>எழுத்துகளின் பிறப்பு (கற்கண்டு) | 1-18 |
| 2. | **இயற்கை**<br>ஈடில்லா இயற்கை | இயற்கையைப் போற்றுவோம் (கவிதைப்பேழை)*<br>பட்டமரம் (கவிதைப்பேழை)<br>தமிழர் மருத்துவம் - நேர்காணல் (உரைநடை)<br>வெட்டுக்கிளியும் சருகுமானும் (விரிவானம்)<br>மயங்கொலிகள் (கற்கண்டு)<br>திருக்குறள் (வாழ்வியல்)* | 19-36 |
| 3. | **கல்வி**<br>கல்வி கரையில | பாடறிந்து ஒழுகுதல் (கவிதைப்பேழை)*<br>புத்தியைத் தீட்டு (கவிதைப்பேழை)*<br>பல்துறைக் கல்வி (உரைநடை)<br>ஆன்ற குடிப்பிறத்தல் (விரிவானம்)<br>வினைமுற்று (கற்கண்டு) | 37-52 |
| 4. | **கலை, அழகியல், பண்பாடு**<br>குழலினிது யாழினிது | திருக்கேதாரம் (கவிதைப்பேழை)<br>நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் (உரைநடை)<br>தமிழர் இசைக்கருவிகள் (விரிவானம்)<br>எச்சம் (கற்கண்டு)<br>திருக்குறள் (வாழ்வியல்)* | 53-69 |
| 5. | **நாகரிகம், தொழில், வணிகம்**<br>வையம்புகழ் வணிகம் | வளம் பெருகுக (கவிதைப்பேழை)<br>கோணக்காத்துப் பாட்டு (கவிதைப்பேழை)<br>கொங்குநாட்டு வணிகம் (உரைநடை)<br>காலம் உடன் வரும் (விரிவானம்)<br>வினையால் அமையும் தொடர்கள் (கற்கண்டு) | 70-85 |





enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6. | **நாடு, சமூகம்** பாருக்குள்ளே நல்ல நாடு | சிங்கி பெற்ற பரிசு (கவிதைப்பேழை) | 86-97 |
| | | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் (உரைநடை) | |
| | | ஒருவன் இருக்கிறான் (விரிவானம்) | |
| | | இடைச்சொல், உரிச்சொல் (கற்கண்டு) | |
| 7. | **அறம், தத்துவம், சிந்தனை** அறத்தால் வருவதே இன்பம் | ஒன்றே குலம் (கவிதைப்பேழை)* | 98-118 |
| | | மெய்ஞ்ஞான ஒளி (கவிதைப்பேழை) | |
| | | அயோத்திதாசர் சிந்தனைகள் (உரைநடை) | |
| | | மனித யந்திரம் (விரிவானம்) | |
| | | வேற்றுமை (கற்கண்டு) | |
| | | திருக்குறள் (வாழ்வியல்)* | |
| 8. | **மனிதம், ஆளுமை** குன்றென நிமிர்ந்துநில் | நோயும் மருந்தும் (கவிதைப்பேழை)* | 119-133 |
| | | சட்டமேதை அம்பேத்கர் (உரைநடை) | |
| | | பால் மனம் (விரிவானம்) | |
| | | புணர்ச்சி (கற்கண்டு) | |
| படைப்புகளும் ஆசிரியர்களும் | | | 134 |
| பொதுப்பத்தி வினா - விடைகள் (பலவுள் தெரிக - சுருக்கமான விடையளி மாதிரி) | | | 135-154 |
| காட்சியைக் கண்டு கவினுற எழுதுக | | | 155-194 |
| கடிதங்கள் | | | |
| பொதுக்கட்டுரைகள் | | | |
| CBSE மாதிரி வினாத்தாள்கள் (I to IV) | | | 195-218 |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Padi | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Asiad Colony | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** | Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **FEDERAL BANK** | Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Anna Nagar | Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : FDRL0001324 | IFSC | : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027** **For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044-4862 9977, 044-4862 7755.
**Mobile :** 96001 75757 / 81242 01000 / 81243 01000.
**email :** orders@surabooks.com Website : www.surabooks.com


www.surabooks.com

## இயல் 1 - மொழி - தமிழ் இன்பம்

# தமிழ்மொழி வாழ்த்து (கவிதைப்பேழை)

- பாரதியார்

### மன வரைபடம்




### நூற்குறிப்பு

- இப்பாடல் **பாரதியார் கவிதைகள்** என்னும் தொகுப்பில் **தமிழ்மொழி வாழ்த்து** என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

### ஆசிரியர் குறிப்பு

- கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் சி.சுப்பிரமணிய பாரதியார்.
- **இந்தியா, விஜயா** முதலான இதழ்களில் எழுதி விடுதலைப் போருக்கு வித்திட்டவர். கவிதைகள் மட்டுமன்றி, **சந்திரிகையின் கதை, தராசு** உள்ளிட்ட உரைநடை நூல்களையும் வசன கவிதைகளையும் சீட்டுக்கவிகளையும் எழுதியவர்.
- **சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன்** என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார்.

### சொல்லும் பொருளும்

- நிரந்தரம் – காலம் முழுமையும்
- சூழ்கலி – சூழ்ந்துள்ள அறியாமை இருள்
- இசை – புகழ்
- வைப்பு – நிலப்பகுதி
- வண்மொழி – வளமிக்கமொழி
- தொல்லை – பழமை, துன்பம்



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

## வினாக்கள்

**குறுவினா**

**1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது ?**

ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்டு தமிழ்மொழி வாழ்கிறது.

**2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது ?**

வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது தமிழ்.

**சிறுவினா**

**1. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

- தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க!
- ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க!
- ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க!
- எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க!
- எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்!
- பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க!
- தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க!
- வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

**2. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன ?**

**பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் :**

- தமிழ்மொழி, தமிழ் பேசும் பலருடைய தாய்மொழி. திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மையான மொழி. எல்லா மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது.
- தமிழ், அறிவியல், மருத்துவம், கணிதம் எனப் பலவற்றையும் கூறுகிறது. தமிழர் வானியல் அறிவிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.
- வான் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்கள் தமிழில் உள்ளன. ஞாயிறு, திங்கள், விண்மீன் மற்றும் வானில் வலம் வரும் கோள்கள் பற்றியும் ஆராய்ந்து கூறியுள்ளனர் தமிழர்.
- இலக்கியவளம், இலக்கண வளம், சொல்வளம் என எல்லா வளங்களையும் தமிழ்மொழி பெற்றுள்ளதால் பாரதியார் தமிழ்மொழியை வண்மொழி என்று அழைக்கிறார்

**கூடுதல் வினா**

**1. பாரதியார் – சிறுகுறிப்பு எழுதுக.**

- கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் சி.சுப்பிரமணிய பாரதியார்.

- இந்தியா, விஜயா முதலான இதழ்களில் எழுதி விடுதலைப் போருக்கு வித்திட்டவர். கவிதைகள் மட்டுமன்றி, சந்திரிகையின் கதை, தராசு உள்ளிட்ட உரைநடை நூல்களையும் வசன கவிதைகளையும் சீட்டுக்கவிகளையும் எழுதியவர்.
- சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார்.

## செய்யுள் வரி வினா விடை

1. **வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!**
**வாழிய வாழியவே!**
**வான மளந்தது அனைத்தும் அளந்திடு**
**வண்மொழி வாழியவே!**
**ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி**
**இசைகொண்டு வாழியவே!**
**எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!**
**என்றென்றும் வாழியவே!**

**வினாக்கள்**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?**
அ) பாரதியார் கவிதைகள்    ஆ) பாஞ்சாலி சபதம்
இ) கண்ணன் பாட்டு    ஈ) குயில் பாட்டு
**விடை அ) பாரதியார் கவிதைகள்**

2. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**
அ) கவிமணி தேசிக விநாயகம்    ஆ) நாமக்கல் கவிஞர்
இ) பாரதியார்    ஈ) பாரதிதாசன்
**விடை இ) பாரதியார்**

3. **வண்மொழி என்பதன் பொருள் யாது ?**
அ) வலிமையான மொழி    ஆ) வளமிக்க மொழி
இ) செழுமையான மொழி    ஈ) அழகான மொழி
**விடை ஆ) வளமிக்க மொழி**

4. **நிலப்பகுதி எத்தனை கடல்களால் சூழப்பட்டது ?**
அ) ஐந்து கடல்களால்    ஆ) ஆறு கடல்களால்
இ) ஏழு கடல்களால்    ஈ) எட்டு கடல்களால்
**விடை இ) ஏழு கடல்களால்**

5. **இப்பாடலின் தலைப்பு யாது ?**
அ) வாழ்க தமிழ்மொழி    ஆ) செம்மொழியின் சிறப்பு
இ) தமிழ்மொழி வாழ்த்து    ஈ) தமிழ்மொழியின் சிறப்பு
**விடை இ) தமிழ்மொழி வாழ்த்து**

www.surabooks.com



2. **சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்**
**துலங்குக வையகமே!**
**தொல்லை வினைதரு தொல்லை அகன்று**
**சுடர்க தமிழ்நாடே!**
**வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!**
**வாழ்க தமிழ்மொழியே!**
**வானம் அறிந்த தனைத்தும் அறிந்து**
**வளர்மொழி வாழியவே!**

**வினாக்கள்**

1. **சூழ்கலி – பொருள் தருக.**
அ) சூழ்ந்துள்ள கடல் ஆ) சூழ்ந்துள்ள பொறாமை
இ) சூழ்ந்துள்ள அன்பு ஈ) சூழ்ந்துள்ள அறியாமை இருள்
**விடை ஈ) சூழ்ந்துள்ள அறியாமை இருள்**

2. **தொல்லை – பொருள் தருக.**
அ) மகிழ்ச்சி ஆ) இன்பம் இ) துன்பம் ஈ) இரக்கம் **விடை இ) துன்பம்**

3. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**
அ) சுப்பிரமணிய பாரதியார் ஆ) புரட்சிக்கவி பாரதிதாசன்
இ) நாமக்கல் கவிஞர் ஈ) மனோன்மணியம் சுந்தரனார்
**விடை அ) சுப்பிரமணிய பாரதியார்**

4. **தமிழ்நாடு எவ்வாறு ஒளிர வேண்டும் ?**
அ) தொல்லைகள் அகன்று ஆ) நன்மைகள் பெருகி
இ) அறங்கள் நீங்கி ஈ) வறுமை ஒழிந்து **விடை அ) தொல்லைகள் அகன்று**

5. **பாரதியாரை “மறம் பாடவந்த மறவன்” என்று பாடியவர் யார் ?**
அ) வ.உ.சிதம்பரனார் ஆ) தில்லையாடி வள்ளியம்மை
இ) பாரதிதாசன் ஈ) நாமக்கல் கவிஞர் **விடை இ) பாரதிதாசன்**

☆ ☆ ☆


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# ஆழிக்கு இணை (கவிதைப்பேழை)

- சந்தக்கவிமணி தமிழழகனார்

## மன வரைபடம்

**ஆழிக்கு இணை**




| | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் | முத்துகளைத் தருகிறது |
| முச்சங்கம் | முதல், இடை, கடை | வெண்சங்கு, சலஞ்சலம் பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது |
| மெத்த வணிகலன் | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது | தன் அலையால் சங்கினைக் காத்தல் |

## நூற்குறிப்பு

- ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுற மொழிதல் அணி ஆகும்.
- இதனைச் "சிலேடை" என்றும் கூறுவர்.
- இப்பாடலில் அமைந்துள்ள சில சொற்றொடர்களின் பொருள் தமிழ், கடல் ஆகிய இரண்டுக்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளதால் இஃது இரட்டுறமொழிதல் அணி ஆகும்.
- தனிப்பாடல் திரட்டு (ஐந்தாம் பகுதி – கழகப் பதிப்பு) என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது.

www.surabooks.com

## ஆசிரியர் குறிப்பு

- தமிழழகனாரின் இயற்பெயர் சண்முகசுந்தரம்.
- இவர் சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுகிறார்.
- இவர் இளம்வயதிலேயே இலக்கணப் புலமையும் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றவர்.
- பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

## சொல்லும் பொருளும்

- துய்ப்பதால் – கற்பதால், தருதலால்
- மேவலால் – பொருந்துதலால், பெறுதலால்
- மெத்த வணிகலம் – அணிகலன், பெரிய வணிகக் கப்பல்
- நித்தம் – நாள்தோறும்
- ஆழி – கடல்

## வினாக்கள்

### குறுவினா

1. **தமிழ் யாரால் காக்கப்பட்டதாகத் தமிழழகனார் கூறுகிறார் ?**

    சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் தமிழ் காக்கப்பட்டது.

2. **இரட்டுற மொழிதல் அணி என்பது யாது ?**
    - ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுற மொழிதல் அணி ஆகும்.
    - இதனைச் "சிலேடை" என்றும் கூறுவர்.

### கூடுதல் வினாக்கள்

1. **ஐம்பெருங்காப்பியங்கள் யாவை ?**

    சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

2. **கடலிலிருந்து கிடைக்கும் பொருட்கள் யாவை ?**
    - முத்தும், அமிழ்தமும் கிடைக்கிறது.
    - வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகள் கிடைக்கின்றன.

3. **தமிழ்மொழி குறித்து தமிழழகனார் கூறிய செய்தி யாது ?**
    - தமிழ் இயல், இசை, நாடகம் முத்தமிழாய் வளர்ந்தது.
    - முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
    - ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
    - சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

**சிறுவினா**

1. **தமிழையும் கடலையும் ஒப்பிட்டுத் தமிழழகனார் கூறுவன யாவை?**

**தமிழ்**

- இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது

**கடல்**

- முத்துக்களைத் தருகிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
- மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது.
- தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

| பாடல் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினை அமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கம் | மூன்று வகையான சங்குகள் தருதல் |
| மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை | நீரலையைத் தடுத்து நிறுத்தி, சங்கினைக் காத்தல் |

2. **தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

**தமிழ்:** தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது:
முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது :
ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது:
சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.

**கடல்:** கடல், முத்தினைத் தருகிறது.
வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது : தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

www.surabooks.com



## செய்யுள் வரி வினா விடை

1. முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் -நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்(கு)
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

**வினாக்கள்**

1. **இப்பாடலை இயற்றியவர் யார்?**

அ) ஈரோடு தமிழன்பன் ஆ) சாத்தனார்
இ) சந்தக்கவிமணி தமிழழகனார் ஈ) பெருஞ்சித்திரனார்

**விடை இ) சந்தக்கவிமணி தமிழழகனார்**

2. **மெத்த அணிகலன் என்பது யாது?**

அ) சிற்றிலக்கியங்கள் ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்
இ) நீதி இலக்கியங்கள் ஈ) பக்தி இலக்கியங்கள்

**விடை ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்**

3. **இரட்டுற மொழிதல் – பிரித்து எழுதுக.**

அ) இரண்டு + உற + மொழிதல் ஆ) இரு + உற + மொழிதல்
இ) இரண்டுற + மொழிதல் ஈ) இரண்டு + உற்று + மொழிதல்

**விடை அ) இரண்டு + உற + மொழிதல்**

4. **முத்தமிழ் பொருள் தருக.**

அ) இசை, நாட்டியம், நாடகம் ஆ) இயல், இசை, நாடகம்
இ) நாட்டியம், நாடகம், மருத்துவம் ஈ) இசை, மருத்துவம், நாடகம்

**விடை ஆ) இயல், இசை, நாடகம்**

5. **இப்பாடல் இடம்பெற்றுள்ள தொகுப்பு எது?**

அ) முக்கூடற்பள்ளு ஆ) பிள்ளைத்தமிழ்
இ) தமிழ்விடுதூது ஈ) தனிப்பாடல் திரட்டு

**விடை ஈ) தனிப்பாடல் திரட்டு**

☆ ☆ ☆

www.surabooks.com

# தமிழ் வரிவழவ வளர்ச்சி (உரைநடை உலகம்)

## வினாக்கள்

**குறுவினா**

**1. ஓவிய எழுத்து என்றால் என்ன ?**

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன ?**

- ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது.
- அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

**3. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன ?**

- பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன.
- பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.
- ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர்.
- சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

**4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**

- தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.
- எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார்.
- எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.
- அதேபோல ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக் கொம்பு (ே), இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ோ) புதிய வரிவடிவத்தை அறிமுகப்படுத்தினார்

**வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | கெ் | கெ | கொ் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

**சிறுவினா**

1. **எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**
   - ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
   - ஓலைச்சுவடிகளில் நிறுத்தக் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.
   - புள்ளி இடப்பட்டு எழுதவேண்டிய எழுத்துகள் புள்ளிகள் இல்லாமல் எழுதப்படும்போது அவற்றின் இடம் நோக்கி மெய்யா உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.
   - இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

2. **தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**
   - நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுத்தப்படுகிறது.
   - ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுத்தப்படுகிறது.
   - ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது.
   - குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின்மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

3. **தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**
   - பள்ளிகளில் தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். பிறமொழிகளையும் அறிந்து கொள்ளுதல் நன்மை பயக்கும் என்பதால் அவற்றைக் கூடுதலாக கற்க வழிவகை செய்யலாம்.
   - தமிழ் வழியில் படிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.
   - கன்னித் தமிழைக் கணினித் தமிழில் ஏற்றி உலகெங்கும் பரப்ப வேண்டும்.
   - புதியதாகக் கண்டறியப்பட்ட அறிவியல் சாதனங்களுக்கும், பிற துறையில் கண்டறியப்படும் சொற்களுக்கும் கலைச்சொற்களைக் கண்டறிய வேண்டும்.
   - பிறமொழியில் உள்ள நூல்களைத் தமிழில் எளிமையான முறையில் மொழிபெயர்க்க வேண்டும்.
   - சிறந்த தமிழ் நூல்கள் நிறைந்த, இலவச நூலகங்களை நாடெங்கிலும் அமைக்க வேண்டும்.
   - ஒவ்வொரு துறைக்கும் எளிமையான தமிழில் நூல்கள் வெளியிடப்பட வேண்டும்.

www.surabooks.com

www.surabooks.com



**நெடுவினா**

**1. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

- மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.
- அதற்காகப் பாறைகளிலும் குகைச்சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.
- தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.
- அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது.
- அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து வடிவ நிலை என்பர்.

**கூடுதல் வினா**

**1. பெரியார் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தம் குறித்து எழுதுக.**

- இருபதாம் நூற்றாண்டுவரை ணா, றா, னா ஆகிய எழுத்துகளை **ௌ, ரு, ௌ** என எழுதினர்.
- அதே போல ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை **ணை, லை, ளை, னை** என எழுதினர்.
- இவற்றை அச்சுக் கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது.
- இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்தில் சீர்திருத்தம் செய்தார்.
- அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழ்நாடு அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|---|
| 1. | ௌ | ணா | அண்ௌ – அண்ணா |
| 2. | ணை | ணை | அணை – அணை |
| 3. | ொௌ | ணொ | மண்ொௌடு – மண்ணொடு |
| 4. | ோௌ | ணோ | கண்ோௌடு – கண்ணோடு |
| 5. | லை | லை | தலை – தலை |
| 6. | ளை | ளை | களை – களை |
| 7. | ரு | றா | சிருர் – சிறார் |
| 8. | ெரு | றொ | மற்ெருரு – மற்றொரு |

www.surabooks.com



| வ. எண் | பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|---|
| 9. | றோ | றோ | காற்றோடு – காற்றோடு |
| 10. | ஹ | னா | மன்ஹ – மன்னா |
| 11. | ஊ | னை | விஊ – வினை |
| 12. | னெ | னொ | என்னெடு – என்னொடு |
| 13. | னே | னோ | என்னேடு – என்னோடு |

2. **தமிழில் புள்ளிகளும் எழுத்துகளும் எவ்வாறு இருந்தன ?**

- எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது.
- எடுத்துக்காட்டாக, எ்து என எழுதப்பட்டால் எது என்றும் எது என எழுதப்பட்டால் ஏது என்றும் ஒலித்தனர்.
- அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கருதப்பட்டன. (க. = கா, த. = தா ).
- ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின்முன் இரட்டைப் புள்ளி இட்டனர். (..க = கை).
- எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன. (கெ.. = கௌ, தெ.. = தௌ ).
- மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி(ப்) இட்டனர்.
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

☆ ☆ ☆

www.surabooks.com

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# சொற்பூங்கா (விரிவானம்)

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை
தமிழ்மொழியின் தனிச்சிறப்பு
ஓரெழுத்து ஒருமொழிகள்
தொல்காப்பியரின் ஓரெழுத்து மொழி
நன்னூலார் கூற்று
ஓரெழுத்து ஒருமொழி பயன்பாடு
முடிவுரை

**முன்னுரை**

ஒவ்வொரு மொழியிலும் காலந்தோறும் புதிய இலக்கியங்களும், புதிய சொற்களும் தோன்றுகின்றன. அது மொழியின் வளர்ச்சிக்கு அடையாளமாகத் திகழ்கிறது.

**தமிழ்மொழியின் தனிச்சிறப்பு**

தமிழ்மொழி பழங்காலம் தொட்டு இயங்கி வருவது அதன் பெருஞ்சிறப்பு. தொன்மையான மொழிகள் பல ஏட்டளவில் மட்டுமே இருக்கின்றன. ஆனால் தமிழறிந்த, தமிழ்ப் பற்றுள்ள யாரும் கற்கமுடியாது எனச் சொல்லும் ஒரு நூல்கூடத் தமிழில் இல்லை என்பது தமிழின் தனிச்சிறப்பாகும்.

அதற்கு காரணம் தமிழ்மொழி செந்தமிழாகவும் செழுந்தமிழாகவும் உயிரோட்டத் தமிழாகவும் இருந்து வருவதே ஆகும். மொழி என்பதற்குச் சொல் என்பதும் ஒரு பொருள்.

மொழியை ஓரெழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.

**ஓரெழுத்து ஒருமொழிகள்**

உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந என்னும் வரிசைகளில் ஐந்து ஐந்து எழுத்துகளும், க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக, நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார் நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

**தொல்காப்பியரின் ஓரெழுத்து மொழி**

குறில் எழுத்துகள் தனித்து நின்று சொல்லாவது இல்லை. நெடில் எழுத்துகளில் உயிர் நெடில் எழுத்துகள், உயிர்மெய் நெடில் எழுத்துகள் என்று கூறாமல் நெட்டெழுத்து ஏழும் ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர்.

**நன்னூலார் கூற்று**

உயிர், நெடில் எழுத்துகளில் 6 எழுத்துகளும், உயிர்மெய் நெடில் எழுத்துகளில் 34 எழுத்துகளும், உயிர்மெய் குறில் எழுத்துகளில் 2 எழுத்துகளும் ஆக 42 எழுத்துகளும் ஓரெழுத்து ஒருமொழி என்கிறார் நன்னூலார்.

**ஓரெழுத்து ஒருமொழி பயன்பாடு**

போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை இக்காலத்தில் வழங்கும் சொற்களாகும். ஆனால் இன்று வழக்கிலுள்ள சில ஓரெழுத்துச் சொற்கள் நன்னூலார் கூறிய பட்டியலில் இல்லாதவை ஆகும். ஆன் என்பது ஆ ஆகியது; மான் என்பது மா ஆகியது; கோன் என்பது கோ ஆகியது; தேன் என்பது தே ஆகியது; பேய் என்பது பே ஆகியது. இவையெல்லாம் காலவெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை.

**முடிவுரை**

தமிழில் ஓரெழுத்து ஒருமொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழைமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும் தமிழ்மொழியின் சொற்களை மீட்டெடுத்தலே வழிகாட்டிகளுக்கு முதல் கடமையாய் இருக்கிறது.

## தெளிந்து தெளிவோம்

### ஓரெழுத்து ஒரு மொழிகள் – 42

| | | | |
|---|---|---|---|
| உயிர் எழுத்து | – ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | ககர வரிசை | – கா, கூ, கை , கோ |
| மகர வரிசை | – மா, மீ, மூ, மே , மை , மோ | சகர வரிசை | – சா, சீ, சே , சோ |
| தகர வரிசை | – தா தீ, தூ, தே , தை | வகர வரிசை | – வா, வீ, வை , வெள |
| பகர வரிசை | – பா , பூ, பே , பை , போ | யகர வரிசை | – யா |
| நகர வரிசை | – நா, நீ, நே , நை , நோ | குறில் எழுத்து | – நொ , து |

☆ ☆ ☆

www.surabooks.com

www.surabooks.com




# எழுத்துகளின் பிறப்பு (கற்கண்டு)

**அறிந்து கொள்க**

**உயிர் எழுத்துகள்**
- உயிர்க்குறில்–5 (அ, இ, உ, எ, ஒ)
- உயிர்நெடில்–5 (ஆ, ஈ, ஊ, ஏ, ஓ)
- இணை உயிர்–2 (ஐ, ஔ)

**மெய் எழுத்துகள்**
- வல்லினம் (க், ச், ட், த், ப், ற்)
- மெல்லினம் (ங், ஞ், ண், ந், ம், ன்)
- இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்)

| எழுத்துகள் | இடப்பிறப்பு |
|---|---|
| உயிர் எழுத்துகள் | கழுத்து |
| வல்லின மெய் | மார்பு |
| மெல்லின மெய் | மூக்கு |
| இடையின மெய் | கழுத்து |
| ஆய்த எழுத்து | தலை |




| உயிர் எழுத்துகள் | முயற்சிப் பிறப்பு – இதழ் → நாக்கு → பல் → மேல் வாய் அண்ணம் |
|---|---|
| அ, ஆ | வாய் திறத்தல் |
| இ, ஈ, எ, ஏ, ஐ | வாய்திறத்தலுடன் நாக்கின் அடி ஓரமானது மேல் வாய்ப்பல்லைப் பொருந்துதல். |
| உ, ஊ, ஒ, ஓ, ஔ | வாய்திறத்தலுடன் இதழ்களைக் குவித்தல். |

| மெய்யெழுத்துகள் | முயற்சிப் பிறப்பு – இதழ் → நாக்கு → பல் → மேல் வாய் அண்ணம் |
|---|---|
| க், ங் | நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துதல். |
| ச், ஞ் | நாவின் இடைப் பகுதி, நடு அண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துதல். |
| ட், ண் | நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துதல். |
| த், ந் | மேல் வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துதல். |
| ப், ம் | மேல் உதடும் கீழ் உதடும் பொருந்துதல். |
| ற், ன் | மேல் வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துதல். |
| ய் | நாக்கின் அடிப்பகுதி, மேல் வாய் அடிப்பகுதியைப் பொருந்துதல் |
| ர், ழ் | மேல் வாயை நாக்கின் நுனி வருடுவதால். |
| ல் | மேல் வாய்ப்பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குதல். |
| ள் | மேல் வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதல். |
| வ் | மேல் வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துதல். |

www.surabooks.com



**இலக்கண வினா விடைகள் :**

1. **எழுத்துகளின் பிறப்பை எத்தனை வகையாகப் பிரிப்பர் ?**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **விடை: அ) இரண்டு**

2. **உயிர் எழுத்துகள் எத்தனை ?**

அ) 10 ஆ) 12 இ) 14 ஈ) 18 **விடை: ஆ) 12**

3. **வல்லின மெய்கள் எத்தனை ?**

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது **விடை: அ) ஆறு**

4. **மெல்லின மெய்கள் எத்தனை ?**

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது **விடை: அ) ஆறு**

5. **ஆய்த எழுத்து ................ இடமாகக் கொண்டு பிறக்கிறது.**

அ) கழுத்து ஆ) மார்பு இ) மூக்கு ஈ) தலை **விடை: ஈ) தலை**

6. **உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் ............ இடமாகக் கொண்டு பிறக்கின்றன.**

அ) மார்பு ஆ) தலை இ) கழுத்து ஈ) மூக்கு **விடை: இ) கழுத்து**

7. **வல்லின எழுத்துகள் ............ இடமாகக் கொண்டு பிறக்கின்றன.**

அ) தலை ஆ) மார்பு இ) கழுத்து ஈ) மூக்கு **விடை: ஆ) மார்பு**

8. **வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கும் உயிரெழுத்துகள் எவை ?**

அ) அ, ஆ ஆ) எ, ஏ இ) இ,ஈ ஈ) உ, ஊ **விடை: அ) அ, ஆ**

9. **உதடுகளைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ...............**

அ) இ,ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ **விடை: ஆ) உ, ஊ**

10. **நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ............**

அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம் **விடை: இ) ட், ண்**

11. **கீழ் உதடும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து .....**

அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ் **விடை: ஈ) வ்**

12. **மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கும் மெய்யெழுத்துகள் ....................**

அ) ர், ழ் ஆ) ப், ம் இ) ற், ன் ஈ) த், ந் **விடை: இ) ற், ன்**

13. **நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறப்பது .......**

அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) த், ந் **விடை: அ) க், ங்**

14. **இடையின மெய் எழுத்துகள் பிறக்கும் இடத்தைக் கண்டறிக.**

அ) தலை ஆ) கழுத்து இ) மார்பு ஈ) மூக்கு **விடை: ஆ) கழுத்து**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



15. **நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடிப்பகுதியில் தோன்றுவது ..............**

அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) த், ந் **விடை: ஈ) த், ந்**

16. **மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறப்பது ..............**

அ) ள் ஆ) வ் இ) ய் ஈ) ல் **விடை: ஆ) வ்**

17. **ட், ண் ஆகிய இரு மெய்களும் ..............**

அ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன

ஆ) மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் நெருங்குவதால்

இ) மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால்

ஈ) நாவின் இடைப்பகுதி நடு அண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால்

**விடை: அ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன**

18. **க், ங் ஆகிய எழுத்துகள் பிறக்கும் முறையைக் கண்டறிக.**

அ) நாவின் இடை, அண்ணத்தின் இடை ஆ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

இ) நாவின் முதல், அண்ணத்தின் அடி ஈ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

**விடை: இ) நாவின் முதல், அண்ணத்தின் அடி**

19. **ட், ண் எழுத்துகளின் பிறப்பைக் கண்டறிக.**

அ) நாவின் முதல், அண்ணத்தின் அடி ஆ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

இ) நாவின் இடை, அண்ணத்தின் இடை ஈ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

**விடை: ஆ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி**

20. **ச், ஞ் எழுத்துகளின் பிறப்பைக் கண்டறிக.**

அ) நாவின் இடை, அண்ணத்தின் இடை ஆ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

இ) நாவின் முதல், அண்ணத்தின் அடி ஈ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

**விடை: அ) நாவின் இடை, அண்ணத்தின் இடை**

**சான்று தருக.**

1. **இடப்பிறப்பு (மார்பு)**

அ) வல்லினம் ஆ) இடையினம்

இ) மெல்லினம் ஈ) ஆய்த எழுத்து **விடை: அ) வல்லினம்**

2. **மேல் உதடும் கீழ் உதடும் பொருந்துதல்**

அ) ர், ழ் ஆ) ற், ன் இ) த், ந் ஈ) ப், ம் **விடை: ஈ) ப், ம்**

3. **உயிர்க்குறில்**

அ) அ, இ ஆ) ஆ, ஈ இ) உ, ஒ ஈ) ஔ, ஒ **விடை: அ) அ, இ**

www.surabooks.com

www.surabooks.com



4. **உயிர்நெடில்**

அ) உ, ஊ ஆ) ஐ, இ இ) ஏ, ஒ ஈ) ஏ, உ **விடை: இ) ஏ, ஒ**

5. **மெல்லின மெய்கள்**

அ) ம், ன் ஆ) வ், ல் இ) த், ற் ஈ) ங், ச் **விடை: அ) ம், ன்**

**நிரப்புக.**

1. **................. தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.**

அ) இடையினமெய் ஆ) வல்லினமெய்

இ) உயிர் எழுத்துகள் ஈ) ஆய்த எழுத்து **விடை: ஈ) ஆய்த எழுத்து**

2. **கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்து ............................**

அ) வல்லின மெய் ஆ) இடையின மெய்

இ) மெல்லின மெய் ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: ஆ) இடையின மெய்**

3. **மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கும் எழுத்து**

அ) ய் ஆ) ள் இ) வ் ஈ) ற் **விடை: ஆ) ள்**

4. **மெல்லின மெய் எழுத்துகளின் பிறப்பிடம்**

அ) தலை ஆ) மூக்கு இ) கழுத்து ஈ) மார்பு **விடை: ஆ) மூக்கு**

**கூறியவாறு செய்க.**

1. **ர், ழ் (முயற்சிப் பிறப்பு எழுதுக)**

அ) மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால்

ஆ) மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால்

இ) மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்து தடவுவதால்

ஈ) மேல்வாய்ப் பல்லை கீழ் உதடு பொருந்துவதால்

**விடை: அ) மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால்**

2. **புலியின் இளமைப் பெயரைக் கூறுக.**

அ) கன்று ஆ) குட்டி இ) பறழ் ஈ) குருளை **விடை: இ) பறழ்**

3. **சிங்கம் (ஒலி மரபு எழுதுக)**

அ) முழங்கும் ஆ) உறுமும் இ) பிளிறும் ஈ) கதறும் **விடை: அ) முழங்கும்**

4. **சுவர் (வினை மரபுச்சொல்லைத் தேர்க)**

அ) கட்டினான் ஆ) செய்தான் இ) எழுப்பினான் ஈ) வைத்தான் **விடை: இ) எழுப்பினான்**

5. **மக்கள் (தொகை மரபு கூறுக)**

அ) மந்தை ஆ) வெள்ளம் இ) நிரை ஈ) கூட்டம் **விடை: ஈ) கூட்டம்**

☆ ☆ ☆

www.surabooks.com

# இயற்கையைப் போற்றுவோம் (கவிதைப்பேழை)

- இளங்கோவடிகள்

## நூற்குறிப்பு

- சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
- இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது.
- இவர் காலம் பொ.ஆ. (கி.பி.)இரண்டாம் நூற்றாண்டு என்பர்.
- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம்.
- இதுவே தமிழின் முதல் காப்பியம்.
- இது முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் போற்றப்படுகிறது.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது.

## சொல்லும் பொருளும்

- திங்கள் – நிலவு
- பொற்கோட்டு – பொன்மயமான சிகரத்தில்
- கொங்கு – மகரந்தம்
- மேரு – இமயமலை
- தார் – மாலை
- அங்கண் – அழகிய இடம்
- அலர் – மலர்தல்
- நாமநீர் – அச்சம் தரும் கடல்
- திகிரி – ஆணைச்சக்கரம்
- அளி – கருணை
- ஞாயிறு – கதிரவன்
- சென்னி – சோழ மன்னன்

## வினாக்கள்

### குறுவினா

**1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது ?**

சிலப்பதிகாரக் காப்பியம் திங்கள், ஞாயிறு, மாமழை ஆகியவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது.

**2. இயற்கை போற்றத்தக்கது ஏன் ?**

- நாம் இயற்கையோடு இயைந்து வாழ்கிறோம்.
- இயற்கை என்று சொல்லக்கூடிய சூரியன், சந்திரன், மழை இவையெல்லாம் நாம் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளைக் கொடுத்து உதவுகிறது.
- சூரியன் ஒளியைத் தருவதால் மரங்கள் வளர்கின்றன.
- இதனால் நமக்கு மழை பொழிகிறது.
- மழை நமக்கு உணவைக் கொடுக்கும்.
- இவையெல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது.
- எனவே இயற்கை போற்றத்தக்கதாகும்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

**சிறுவினா**

**1. இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக்காரணமாக எவற்றைக் கருதுகிறார்கள் ?**

இயற்கையாய்த் தோன்றிய கதிரவனை முழு முதற்கடவுளாக எண்ணி வழிபட்டனர். மக்கள் தோன்றிய இடங்களானவை மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சி, காடும் காடு சார்ந்த இடமான முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமான மருதம், கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல். இந்த நானிலங்களில் இருந்த மக்கள் அங்கிருந்த உயிரினங்களையும் இயற்கையையும் வணங்கினர்.

உலகமானது நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐந்தும் உள்ளடக்கியது என உறுதிகொண்டனர். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழிலுக்கு அரசனாக விளங்கும் இறைவன். தொழிலுக்கு ஒன்றாக இந்த ஐம்பூதங்களையே ஊர்தியாகக் கொண்டு உலவுகிறான் என்றும் நம்பினர். இறைவனும் இயற்கையும் வேறுவேறு அல்ல. இரண்டுமே ஒன்றுதான். இறைவன் என்பது இயற்கையின் தாய். இயற்கை என்பது இறைவனின் வடிவங்களுள் ஒன்று என்பதை மெய்ப்பிக்கும் விதமாகவே நாம் இன்றும் சூரியன், சந்திரன், மழை நீர் போன்ற இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

**கூடுதல் வினாக்கள்**

**1. சிலப்பதிகாரம் கதிரவனை எவ்வாறு போற்றுகிறது ?**

காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன் சோழ மன்னன். ஆணைச் சக்கரம் போல, கதிரவனும் இமயமலையை வலப்புறமாகச் சுற்றி வருகிறது. அதனால் கதிரவனைப் போற்றுவோம்.

**2. இளங்கோவடிகள் – குறிப்பு எழுதுக.**

- சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
- இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது.
- இவர் காலம் பொ.ஆ. (கி.பி.) இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

## செய்யுள் வரி வினா விடை

**1. ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!**
**காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு**
**மேரு வலம் திரிதலான்**

**வினாக்கள்**

**1. இப்பாடலை இயற்றியவர் யார் ?**

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார்
இ) அம்மூவனார் ஈ) புகழேந்திப்புலவர்

**விடை** **அ) இளங்கோவடிகள்**

www.surabooks.com



**2. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?**

அ) மணிமேகலை ஆ) வளையாபதி

இ) குண்டலகேசி ஈ) சிலப்பதிகாரம்

**விடை ஈ) சிலப்பதிகாரம்**

**3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஆறு எது ?**

அ) கங்கை ஆ) காவிரி

இ) யமுனை ஈ) கிருஷ்ணா

**விடை ஆ) காவிரி**

**4. இப்பாடலில் இமயமலை என்னும் பொருள் தரும் சொல் எது ?**

அ) ஞாயிறு ஆ) நாடன்

இ) மேரு ஈ) பொற்கோட்டு

**விடை இ) மேரு**

**5. ஞாயிறு என்பதன் பொருள் யாது ?**

அ) நிலவு ஆ) மலை

இ) கதிரவன் ஈ) ஆறு

**விடை இ) கதிரவன்**

☆ ☆ ☆

www.surabooks.com

www.surabooks.com



# பட்டமரம் (கவிதைப்பேழை)

- தமிழ்ஒளி

## நூற்குறிப்பு

- கவிஞர் தமிழ்ஒளி **(1924–1965)** புதுவையில் பிறந்தவர்.
- பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர். மக்களுக்காகப் பல படைப்புகளை உருவாக்கியவர்.
- நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் முதலானவை இவரின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை.
- இப்பாடப்பகுதி தமிழ் ஒளியின் கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. .

## சொல்லும் பொருளும்

- குந்த – உட்கார
- மிசை – மேல்
- குமைந்தனை – வருந்தினாய்
- எழில் – அழகு
- புவி – உலகம்
- கந்தம் – மணம்
- விசனம் – கவலை
- இற்று – அழிந்து
- ஓலம் – அலறல்
- எய்தி – அடைந்து

## இலக்கணக்குறிப்பு

- வெந்து, வெம்பி, எய்தி – வினையெச்சங்கள்
- மூடுபனி – வினைத்தொகை
- ஆடுங்கிளை – பெயரெச்சத்தொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

- **விரித்த – விரி + த் + த் + அ**
  - விரி – பகுதி
  - த் – சந்தி
  - த் – இறந்தகால இடைநிலை
  - அ – பெயரெச்ச விகுதி
- **குமைந்தனை – குமை + த்(ந்) + த் + அன் + ஐ**
  - குமை – பகுதி
  - த் – சந்தி த் – ந் ஆனது விகாரம்
  - த் – இறந்தகால இடைநிலை
  - அன் – சாரியை
  - ஐ – முன்னிலை ஒரு வினைமுற்று விகுதி

www.surabooks.com

## வினாக்கள்

**குறுவினா**

**1. பட்டமரம் எதனை நினைத்துக் கவலை அடைந்தது ?**

பட்டமரம் இலைகளற்ற கிளைகளுடன் நின்று, நாள்தோறும் பெருமூச்சு விட்டுக்கொண்டு தன்னை வெட்டப்படும் நாள் வருமென்று நினைத்துக் கவலை அடைந்தது.

**2. பட்டமரம் எதனால் தனது அழகை இழந்தது ?**

பட்டமரத்தின் உடையாகிய பட்டை கிழிந்ததால் அழகு முழுவதும் இழந்தது.

**3. பட்டமரத்தின் கிளைகளுக்கு உவமையாகக் கூறப்படுவது எது ?**

பட்டமரத்தின் கிளைகளுக்கு, மனிதனின் கைகள் உவமையாகக் கூறப்படுகிறது.

**சிறுவினா**

**1. ஏட்டில் எழுதிய பழங்கதையாக முடிந்தவை எவை ?**

- பாடும் பறவைகள் எல்லாம் ஒன்றுகூடி உனக்காகப் பாடல் பாடியது, பனி மூடிய உலகுக்கு நீ அழகு கொடுத்தது.
- உனது ஆடும் கிளைகளில் சிறுவர்கள் அமர்ந்து குதிரை ஓட்டி விளையாடியது என்பன எல்லாம் ஏட்டில் எழுதிய பழங்கதையாக முடிந்துவிட்டன.

**2. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை ?**

- நிழல் கொடுத்து, மணம் பரப்பி இலை தளிர்களோடு நின்ற மரம், இன்று வெந்து கருகி நிறம் மாறி நிற்கிறதே.
- கட்டை எனும் பெயர்பெற்று பட்டு கருகியது. மரப்பட்டைகளை இழந்து, தன் தோற்றம் அழிந்து நிற்கிறது.
- அன்றொரு நாள் பறவைகள் பாடியதும் பனி படர்ந்ததும், என்கிளைகளில் சிறுவர்கள் ஏறி விளையாடியதும் இன்று கதையாகிப் போனது. இன்றோ மொட்டைக் கிளையோடு மூச்சுவிட்டு நிற்கிறேன் என்று பட்டமரம் தன் வருத்தங்களைப் பாடுகிறது.

**3. மரங்கள் பட்டுவிடாமல் காக்க, செய்ய வேண்டியவையாக நீங்கள் கருதுவன யாவை ?**

- மரங்களை தேவையான அளவு இடைவெளி விட்டு நடவேண்டும்.
- தண்ணீர் போதுமான அளவிற்குப் பாய்ச்ச வேண்டும்.
- இயற்கை உரங்களை இட்டு வளர்க்க வேண்டும். தழை, பிண்ணாக்கு போன்றவற்றை இடவேண்டும்.
- மண் அரிப்பை மரங்கள் தடுக்கின்றன. அம்மரங்களின் வேர்கள் நன்றாக ஊன்றி இருக்கும் அளவிற்கு நிலப்பகுதி உள்ளதா எனப் பார்க்கவேண்டும். ஏனெனில் தற்போது பல இடங்களில் நிலச்சரிவு, நிலநடுக்கம் ஏற்படும் காலங்களில் மரங்கள் அழிவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.
- மழைநீர் சேகரிப்பை மேற்கொண்டு மரங்கள் பட்டுப்போகாமல் இருக்க முயற்சிக்கலாம். நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும்.

www.surabooks.com



## செய்யுள் வரி வினா விடை

1. கட்டை யெனும்பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையே!
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!
காலம் எனும்புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் ஒருமனிதன்
ஓலமி டக்கரம்
நீட்டிய போல்இடர்
எய்தி உழன்றனையே!

**வினாக்கள்**

1. மரத்தின் உடையாகக் குறிப்பிடப்படுவது எது ?
அ) சட்டை ஆ) பட்டை
இ) மட்டை ஈ) கட்டை
**விடை** ஆ) பட்டை

2. எழில் என்பதன் பொருள் யாது ?
அ) வனப்பு ஆ) அழகு
இ) பசுமை ஈ) இனிமை
**விடை** ஆ) அழகு

3. ஓலம் என்பதன் பொருள் யாது ?
அ) வருத்தம் ஆ) சத்தம்
இ) அலறல் ஈ) சங்கடம்
**விடை** இ) அலறல்

4. இப்பாடலை இயற்றியவர் யார் ?
அ) பாரதிதாசன் ஆ) நாமக்கல் கவிஞர்
இ) கவிஞர் தமிழ்ஒளி ஈ) ஈரோடு தமிழன்பன்
**விடை** இ) கவிஞர் தமிழ்ஒளி

5. கிழிந்து + எழில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ?
அ) கிழிந்துஎழில் ஆ) கிழிந்தெழில்
இ) கிழிந்தொழில் ஈ) கிழிந்தழில்
**விடை** ஆ) கிழிந்தெழில்

☆ ☆ ☆

www.surabooks.com

www.surabooks.com



# திருக்குறள் (வாழ்வியல்)

- திருவள்ளுவர்

## நூற்குறிப்பு



- பெருநாவலர், முதற்பாவலர், பொய்யில்புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.
- திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும்.
- இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.
- அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது.
- பொருட்பால் அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது.
- இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

## வினாக்கள்

**1. சான்றோர்க்கு அழகாவது எது ?**

- தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும்.
- அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

**2. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது ?**

பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்துவிடும்.

**3. 'வருமுன்னர்க் காவாதான்....' எனத் தொடங்கும் குறளில் உள்ள உவமை அணியை விளக்குக.**

- நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல் போர் – உவமை
- பழிவருமுன்னே சிந்தித்துத் தம்மைக் காத்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கை – உவமேயம்
- போல – உவம உருபு.
- எனவே – இக்குறளில் உள்ளது உவமையணி ஆகும்.

**4. பிறிதுமொழிதல் அணி என்பது யாது ?**

உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூறவந்த கருத்தை உணர வைப்பது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**கூடுதல் வினாக்கள்**

1. **"புலித்தோல் போர்த்திய பசு" என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?**

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

2. **நடுவுநிலைமையின் சிறப்பு குறித்து எழுதுக.**

- நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும்.
- தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும்.
- அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

3. **மக்களின் பண்புகளை எவ்வாறு உணர்ந்துகொள்ள வேண்டும்?**

- நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமையைத் தருகிறது.
- அதுபோல மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

4. **அம்பு, யாழின் கொம்பு – இவற்றால் அறியப்படுவது யாது?**

- அம்பு நேராக இருந்தாலும் கொடியதாக இருக்கும். யாழின் கொம்பு வளைவுடன் இருந்தாலும் இனிமையைத் தரும்.
- அதுபோல மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல் வகையில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

5. **கல்லாதவர் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?**

கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்றவர். அவர் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தவிர அவரால் வேறு எந்தப் பயனும் இல்லை.

6. **விலங்கொடு மக்கள் அனையர் – விளக்குக.**

கற்றவர்க்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.

7. **தேர், கப்பல் மூலம் வள்ளுவர் கூறும் கருத்து யாது?**

- வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரிய தேர் கடலில் ஓட இயலாது.
- கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது.
- அவரவர் தமக்குரிய இடங்களில் மட்டுமே சிறப்பாகச் செயல்பட முடியும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

## குறட்பாக்களை சரியான சீர்களால் நிரப்புக

### நடுவுநிலைமை

1. தக்கார் ................ என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

அ) அறிவிலார் ஆ) அறியாதார் இ) தகவிலர் ஈ) இல்லார் **விடை: இ) தகவிலர்**

2. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
................ சான்றோர்க்கு அணி.

அ) மறையாமை ஆ) கோடாமை
இ) சான்றாண்மை ஈ) அறியாமை **விடை: ஆ) கோடாமை**

### கூடா ஒழுக்கம்

3. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
................ போர்த்துமேய்ந் தற்று

அ) ஆட்டின்தோல் ஆ) எருமையின்தோல்
இ) புலியின்தோல் ஈ) எலியின்தோல் **விடை: இ) புலியின்தோல்**

4. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு ................
வினைபடு பாலால் கொளல்.

அ) என்ன ஆ) அன்ன இ) தன்ன ஈ) நன்ன **விடை: ஆ) அன்ன**

### கல்லாமை

5. உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் ................ தவர்.

அ) அல்லா ஆ) எல்லா இ) கல்லா ஈ) நல்லா **விடை: இ) கல்லா**

6. விலங்கொடு ................ அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

அ) பறவை ஆ) உயிரினம் இ) விலங்கு ஈ) மக்கள் **விடை: ஈ) மக்கள்**

### குற்றங்கடிதல்

7. வருமுன்னர்க் காவாதான் .............. எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

அ) கல்வி ஆ) செல்வம் இ) வறுமை ஈ) வாழ்க்கை **விடை: ஈ) வாழ்க்கை**

8. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
............... ஆகும் இறைக்கு
அ) என்குற்றம் ஆ) யார்குற்றம் இ) தன்குற்றம் ஈ) அவர்குற்றம் **விடை: அ) என்குற்றம்**

## இடனறிதல்

9. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க ............
இடங்கண்ட பின்அல் லது.
அ) பற்றும் ஆ) முற்றும் இ) அற்றும் ஈ) தற்றும் **விடை: ஆ) முற்றும்**

10. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா ...............
அ) நிலத்து ஆ) மண் இ) வானம் ஈ) நிலவு **விடை: அ) நிலத்து**

☆ ☆ ☆

www.surabooks.com